# சங்க கால திருமண சடங்கு முறைகள்

முனைவர் சி கல்பனா

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி, சூலூர்-641402.

56

**ஆய்வுச் சுருக்கம்**

திருமணம் என்பது சமூக உறவுமுறை அமைப்பாகும். இரண்டு மனங்களுக்கு இடையே திருமணம் நடைபெறுகிறது திருமணம் என்பது மனித இனத்தை பொறுத்தவரை ஒரு உலகளாவிய பொதுவாக கூறப்பட்டாலும் வெவ்வேறு பண்பாடுகளுக்கு இடையே திருமணம் நடைபெறுகிறது திருமணம் என்பது ஒரு புதிய சந்ததி தோற்றுவதற்குரிய ஒரு விதை பிணைப்பு ஆகும் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு அவர்களது வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ப நடத்துவதற்கு பலர் அறிய செய்து கொள்ளும் செயலை மணம் எனப்படும். இம்மனத்தை சங்க காலத்தில் எவ்வாறு எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இதில் காணலாம்.

**திருமணம் சொல்லும் பொருளும்**

மணம் என்ற சொல்லுக்கு கூடுதல் என்பது பொருளாகும் மனமொத்து வாழ்வது முழுவதும் மணம் பெற்று நிகழ்வதற்கு ஏதுவான நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டன சிறப்பான மென்மையான ஒன்றை குறிப்பிட திரு என்ற அடை கொடுத்து அழைப்பது தமிழர் மரபாகையால் இல்லற வாழ்வின் அடிப்படையாக அமையும் மணம் திருமணம் என்று அழைக்கப்படுகிறது.

**பழந்தமிழரும் திருமணமும்**

பண்டைய தமிழர் தன் வாழ்க்கையில் களவொழுக்கம் கற்பொழுக்கம் ஆகிய இருவகை ஒழுக்கங்களை கொண்டிருந்தனர் பற்றி தொல்காப்பியர் கூறும் செய்திகளில் பண்டைய தமிழர்கள் திருமணம் என்ற சடங்கு இல்லாமலேயே இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தனர் என் வகை மன முறைகள் நிகழ்ந்துள்ளன கரணம் என்ற திருமணம் வாயிலாக பொய்மை நிகழாது என நினைத்தனர் இதன் காரணமாக திருமணம் என்ற சடங்கு உருவாற்று இதுவே களவு மனம் கற்பு மணம் இரண்டும் தமிழர் வாழ்க்கை நெறியாக விளங்கியதை அறியலாம் பெற்றோர் நடத்தி வைக்கும் மண வாழ்க்கையை கற்பு நெறி எனப்பட்டது.

மண முறைகள் பொருள் கொடுத்தும் சேவை புரிந்தும் மனத்தால் திறமையை வெளிக்காட்டும் வகையில் வீரத்தின் காரணமாக மணத்தல் போர் நிகழ்த்தி மனத்தல் தன் காதல் மிகுதியை காட்டி மணத்தல் ஆகிய இவ்வகை மணமுறைகள் களவு நெறி கற்பு நெறி ஆகிய இருமணமுறைகளிலும் இருந்தது உறவுமுறை திருமணம் கலப்பு மனம் ஆகிய வகைகளில் கூட களவு மணமும் இருந்தது என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம் இதன் அடிப்படையில் சங்க இலக்கியங்கள் வாயிலாக தெரியவரும் தமிழரின் மனமாக மரபு வழி மணம் சேவை மணம் போர் நிகழ்த்தி மணம் துணைங்கையாடி மணம் ஆகிய மனம் முறைகளை காணலாம்.

மரபு வழி மணம் இதனை பலரறி மணம் என்றும் இயல்பு மணம் என்றும் கூறுவர் பெண்ணின் பெற்றோர் மணமகன் இடம் யான் கொடுப்ப நீ மணந்து கொள் என்று வேண்டி மணமுடித்தல் ஆகும் இதுவே சமூகத்தில் பெரு வழக்காக இருந்தது.

**ஏறு தழுவுதல்**

தமிழரின் வீர உணர்வை காட்டும் செயல் ஏறு தழுவுதல் ஆகும் இது கலித்தொகையில் முல்லை கலியில் ஆயர் குளத்தில் நிலவிய மணவினை சடங்கு என குறிப்பிட்டுள்ளது ஆயர்கள் தங்கள் பெண்களை மணக்கப்போகும் ஆடவரின் திறனை வீரத்தின் அடிப்படையில் மதிப்பிட வேண்டி மேற்கொண்ட வீர விளையாட்டை ஏறு தழுவுதல் ஆகும் காளையை அடக்கி தழுவி நிற்பவனுக்கு தலைவி உரியவள் என்ற குறிக்கோளுடன் ஏழு வளர்த்தனர் வேற்றுமை தழுவி அதற்கு பரிசு பொருளாக ஆயர் மகளை மணப்பதற்கு துணிந்த இளைஞர்களாக ஆயர்கள் இருந்தனர்.

முல்லை நில ஆயர்கள் ஆடு மாடு போன்ற விலங்குகளை பாதுகாக்கும் தொழிலை உடையவர்கள் அவற்றிற்கு புலி முதலிய விலங்குகளால் துன்பம் நேராமல் காக்கும் பொருட்டும் கல்வர் கவர்ந்து செல்லாமல் காக்கும் பொருட்டும். அவர்கள் வீரமிக்கவராக இருத்தல் இன்றியமையாதது இதனால் ஆயர் தன் மகளை திருமணம் செய்ய முன் வருபவரின் ஆற்றலை அறிந்த பின்னரே மகளை மணம் முடித்து கொடுக்கும் வழக்கம் உடையவராக இருந்தனர் என்பதை அறியலாம்.

**மடலேறுதல்**

பனை மடலை குதிரையாக்கி எரியூறுகளை மடமா ஏறுதல் என்றும் மடல் என்றும் சூட்டினார். இச்செயலை மேற்கொள்வதன் மூலம் தலைவனின் காதல் வன்மையை ஊருக்கு உணர்த்துதல் அதன் வழியாக தான் விரும்பிய மணமகளை பெற்று மணத்தல் என இது அமைகிறது மடலேறி மணம் முடித்தலை பெருந்திணையின் பால் படுத்தி கூறுவர் தொல்காப்பியர் பழந்தமிழர் இலக்கியங்களில் இது குறைவாகவே இடம்பெற்றுள்ளது தமிழரின் வாழ்க்கையில் மடல் ஏறுதல் என்பது அருகிலே வழக்கில் இடம்பெற்று இருக்க வேண்டும் பெண்கள் மடர் எழுதுதல் இல்லை ஏனெனில் நானும் துறந்து மடலேறுதல் என்பது காமம் மிக்க கலி படர் தலைவனுக்கு உரிய ஒன்றாகும் வடலூரும் தலைவனை இச்செயலை ஞானமிக்க செயலாக கருதுவதாக குறுந்தொகை பாடல் காட்டுகிறது.

காமம் முற்றிய தலைவன் மடலேறும் காலத்தால் எருக்கன் கண்ணினை சூடி கொள்வான் நாணத்தை முற்றிலுமாக கைவிட்டு இந்நாள் செய்தது இது என்று வெளிப்படையாக கூறுவான். அமிர்தோதி சென்னா அஞ்சவந்த வார்த்திலங்கு வைகை ஏற்று

“செம்மொழி அறிவையை

பெருகதில் அம்மையானே

பெற்று ஆங்கு”

அருகில் அம்மா இவ்வுரே மருகில் நல்லோர் கணவன் இவன் என பல்லோர் கூற யாஅம் நான்காம் சிறிதே இப்பாடலில் ஆனி ஞானத்தை பற்றி கூறி இருக்கிறது ஒரு பெண்ணை திருமணம் செய்ய என்னவெல்லாம் செய்கிறான் என்பதை பற்றி இப்பாடல் உணர்த்துகிறது

**போர் நிகழ்த்தி மனம் முடித்தல்**

தமிழர்கள் வீர உணர்வை விளக்கும் வகையில் மகட்பார் காஞ்சி என்கின்ற திருமண நிகழ்வும் போர் புரிந்து சுட்டுகிறது பண்டை தமிழர் சமுதாயத்தில் ஒருவன் தான் வணக்க விரும்பும் பெண்ணை பெறுதல் அறியது என்ற நிலை உருவாகும் போது போரிட்டு வெற்றி பெற்று தான் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளுதல் என்ற வழக்கம் இடம்பெற்று இருப்பதை புறநானூறு என்ற இலக்கியத்தில் உள்ள பாடல்கள் கூறப்பட்டுள்ளன வெற்றி பெற்று பெண்ணை திருமணம் செய்து கொள்ள திருமணம் பெண்ணுக்காக போர் புரிதல். ஆகியன பற்றி சங்க இலக்கியங்களில் சில பாடல்கள் மூலம் காஞ்சி நிகழ்வை புரிந்து கொள்ள முடிகிறது.

துணங்கையாடி மணத்தல் துணை ஆடுதல் என்பது மகளிர் விளையாட்டில் ஒன்று விழா காலங்களில் துணையையும் மன்னர் போரும் ஒருங்கே நிகழும் துணை கூத்துக்குரிய நாள் நிச்சயிக்கப்பட்டு அந்நாளில் ஆண் பெண் இருபாலரும் தனித்தனியே துணையும் மன்னர் போரின் நிகழ்த்தி காட்டியுள்ளனர்.

**திருமண நிகழ்வு**

ஒரு பெண் மண வினை நிகழும் வரை பிறந்த வீட்டை விட்டு வெளியே வருதல் கூடாது. என்ற கொள்கையின்படி பரிசம் போடுதலும் பெண் வீட்டில் திருமணம் செய்தலும் இடம் பெறுவது தமிழர் வழக்கமாக இருந்தது. காப்பிய காலத்திலும் பெரும்பாலும் மணமகன் வீட்டிலேயே மன வினை நிகழ்ந்துள்ளது. இன்று அவரவர் வசதிக்கேற்ப இறைவன் முன்னிலையில் திருமணக்கூடம் மணமகன் இல்லம் ஆகிய இடங்களில் மணம் நிகழ்த்துதல் இடம்பெறுகிறது.

பழந்தமிழரிடம் இல்லாத வேள்வித்தீவளர்த்தல் வளர்த்தல் ,என்பது சிலப்பதிகாரம் பெருங்கதையில் காணப்படுகிறது. காப்பு நூல் கட்டுதல், மங்கள நீர் கொண்டு வருதல், மணமக்கள் ஒப்பனை, மணமகன் அழைப்பு, அம்மி மிதித்தல், பாத பூஜை செய்தல், அருந்ததி காட்டல்,அறம் செய்தல் முதலிய புதிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

**பரிசமளித்தல்**

பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வணக்கம் தொன்று தொட்டு மக்களிடையே மரபாக இருந்து வந்துள்ளது. அன்று இது முலை வினவ, சிறுவளைவவினவ,பரியம் என்று குறிப்பிடப்பட்டது.

“பாசிலை விலை என்று பெயர் உண்டு.

இதனை

இருப்பிடம் படுத்த வடுவுரை முகத்தர்

கடுங்கோன் கோசர் நீயம மாயினும்” (அகம்)

அறிய முடிகிறது. போன்ற திருமண சடங்குகள் காலந்தோறும் தொடர்ந்து மக்களிடையே பின்பற்றி வந்துள்ளன.

**திருமணத்திற்கு பொருத்தம் பார்த்தல்**

தம் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் திருமணம் செய்ய விரும்புவோர் பொருத்தம் பார்த்தல் சங்ககாலத்தில் மரபாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. முதல் பொருத்தமாக பிறப்பை குறிக்கிறது.

மேலும் அவனது குலத்தையும் குடிக்கு ஏற்ற ஒழுகலானும் வயதும், தோற்றமும், இரு குடும்பங்களின் பொருளாதார நிலையையும், சொல்லப்படுகிறது. இதைப் பற்றி தொல்காப்பிய சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. எது இல்லாவிட்டாலும் பிறப்பு ஒத்திருக்க வேண்டும் என்பது அடிப்படையாக இருந்திருக்கலாம். எல்லா பொருத்தங்களும் உடையவர் எதிர்ப்பட்டு காதல் கொண்டனர் என்பது மரபாகும்.

**முடிவுரை**

இவ்வாறாக தமிழர்கள் திருமண முறைகள் பலவாக இருந்தாலும் இருமனம் ஓத்தே வாழ்க்கை நடத்தி குடும்ப முறைகளை பாரம்பரியமாக பறைசாற்றி வருகின்றனர். பழங்காலம் தொட்டு இன்று வரை வயது வந்த ஆணும், பெண்ணும் தமிழ் காதல் கொண்டு, காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற பொழுது அவர்கள் உடன் போக்கு மேற்கொண்டு திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். திருமண நிகழ்வானது திருமண பொருத்தம் பார்த்தல், பரிசம் அளித்தல் போன்ற திருமண சடங்குகள் காலந்தோறும் தொடர்ந்து மக்களிடையே பின்பற்றி வந்துள்ளன.

**துணை நூல் பட்டியல்**

குறுந்தொகை ,குறிஞ்சித் திணை 14பாடல்

புறநானூறு

அகம் -90

தொல்காப்பிய நூற்பா -269